சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஊர்தி எண். TN-10-G-2525 (Ambassador Car) – பழுதுகள் சரிசெய்யப்பட்டது – பழுதுகள் சரி செய்யப்பட்டதற்கான தொகை ரூ.21,989/– 2010–2011–ஆம் நிதியாண்டில் ஊர்தி பராமரிப்புத் தலைப்பில் ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.91 நாள் 2.9.2010

படிக்கப்பட்டவை:

1. செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106, கடிதம் எண்.நிர்.2/3519/2008, நாள் 16.9.2008.
2. செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106, கடிதம் ந.க.எண்.நிர்.2/3519/2008, நாள் 7.6.2010.

* * *

ஆணை:

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலாளர் மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலத் தேர்தல் ஆணைய ஊர்தி எண்.TN-10-G-2525 (அம்பாசிடர் கார்) பழுதுகள் சரிசெய்யப்பட்டதற்கான செலவினம் ரூ.21,989/–க்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், படிக்கப்பட்ட 2–ல் 2008–2009–ஆம் நிதியாண்டில் செலவினங்கள் முழுமையாக மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்காண் செலவினத்தினை பயன்படுத்தும் நிலை இயலாததாயிற்று என்றும், எனவே, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஊர்தி எண்.TN-10-G-2525 (அம்பாசிடர் கார்)–இல் பழுதுகள் சரிசெய்யப்பட்ட வகையில் வழங்கப்படவேண்டிய தொகை ரூ.21,989/–ஐ 2010–2011–ஆம் நிதியாண்டில் ஊர்தி பராமரிப்புத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வழங்க அனுமதி ஆணை வழங்கும்படி அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஊர்தி எண்.TN-10-G-2525 (அம்பாசிடர் கார்)–க்கு பழுதுகள் சரிசெய்யப்பட்ட வகையில் வழங்கப்படவேண்டிய தொகை ரூ.21,989/– (ரூபாய் இருபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பது மட்டும்)–யை

2010–2011 –ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு ஊர்தி பராமரிப்புத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேற்காணும் செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்க வேண்டும்.

"2070–00 ஏனைய நிருவாகப் பணிகள்
001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும்
I – திட்டத்தில் சேராதது
AB – மாநிலத் தேர்தல் ஆணையம்
21 – மோட்டார் வண்டிகள்
02 – இயங்கும் ஊர்திகளின் பராமரிப்பு"
(து.தொ.கு.2070–00–001–AB–2122),

3. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.159/JS(PM)/2010, நாள் 28.8.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அலாவுதீன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–106.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/9.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
<u>நகல்</u>
நிதித் (ஊ.வ.) துறை, சென்னை–9.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.